**நவம்பர் – 16**


# TNPSC துளிகள்

- வியட்நாம்-இந்தியா இடையிலான 6வது இருதரப்பு இராணுவப் பயிற்சியானது (VINBAX) வியட்நாமின் ஹனோயில் நடைபெற்றது.
- புவனேஸ்வரின் கலிங்கா மைதானத்தில், 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் முதலாவது தேசிய உள்ளரங்க தடகளச் சாம்பியன்ஷிப் போட்டி நடத்தப்பட உள்ளது.
- 10GW திறன் கொண்ட சூரிய மின் கலங்கள் மற்றும் கம்பிச் சில்லுகள் (இங்காட்) உற்பத்தி மையத்தினை அமைக்க டாடா பவர் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
- தெலுங்கானா அரசானது, ஐதராபாத்தில் தெலுங்கானா செயற்கை நுண்ணறிவு புத்தாக்க மையத்தை (TAIH) நிறுவியுள்ளது.
- இந்தூரில் பிறந்த பாடகி பாலக் முச்சால் தனது அசாதாரண மனிதாபிமானப் பணிகளுக்காக கின்னஸ் புத்தகத்திலும் லிம்கா புத்தகத்திலும் இடம்பிடித்துள்ளார்.
- அமைதி மற்றும் மனிதாபிமானத் தலைமைக்கான உலகளாவிய பங்களிப்புகளுக்காக குருதேவ் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கருக்கு பாஸ்டன் உலக மன்றம் (BGF) மற்றும் செயற்கை நுண்ணறிவு உலக சங்கம் (AIWS) ஆகியவற்றால் 2025 ஆம் ஆண்டிற்கான அமைதி மற்றும் பாதுகாப்புக்கான உலக தலைவர் விருது வழங்கப் பட்டது.
- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் (IISc) இணைப் பேராசிரியர் டாக்டர் சாய் கௌதம் கோபாலகிருஷ்ணனுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான மனோகர் பாரிக்கர் யுவ விஞ்ஞானி விருது வழங்கப்பட்டது.
- வடக்கு காசா பகுதிக்குள் நுழைவதற்கான முக்கிய நுழைவுப் பகுதியான ஜிகிம் கடப்புப் பகுதியானது, அப்பகுதிக்குள் மனிதாபிமான உதவிகள் வருவதை அனுமதிக்க இஸ்ரேலால் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.
- 1998 ஆம் ஆண்டில் உலக கருணை இயக்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு, நவம்பர் 13 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகின்ற உலக கருணை தினம் ஆனது, உலகளாவியத் தன்னுணர்வு, தாராள மனப்பான்மை மற்றும் கூட்டுறவு நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுகிறது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பள்ளிக்கரணை சதுப்பு நிலத் தகராறு

- சென்னையில் உள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைச் சுற்றியுள்ள ராம்சர் தளத்திற்குள் குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டப்படுவதாகக் கூறி நீதிமன்றத்தில் ஒரு பொது நல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.
- பள்ளிக்கரணையில் உள்ள ராம்சர் தளத்தின் எல்லைகளை நிர்ணயிப்பதற்கான 'ground truthing' எனும் உண்மை கண்டறியும் பயிற்சி இன்னும் முழுமையாக முடிக்கப் படவில்லை.
- சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த 'ராம்சர் தளங்கள்' என நியமிக்கப்பட்ட 20 ஈர நிலங்களைக் கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும்.




## பருவநிலை நடவடிக்கை மாதிரி




- தமிழ்நாடு அரசானது, பருவநிலை நடவடிக்கைப் பணிகளை ஒருங்கிணைக்க என்று தமிழ்நாடு பசுமைப் பருவநிலை நிறுவனத்தை உருவாக்கியுள்ளது.
- இது பருவநிலை மாற்றம், பசுமைப் பரவல், ஈரநிலங்கள் மற்றும் கடலோர மீளுருவாக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய நான்கு திட்டங்களை செயல்படுத்துகிறது.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியாவின் உமிழ்வில் 7% பங்கைக் காட்டும் பசுமை இல்ல எரி

வாயு விவரப் பட்டியலை மாநில அரசு வெளியிட்டது.

- 2005 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் அதன் உமிழ்வுச் செறிவினை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 60% குறைத்தது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆனது தமிழ்நாட்டின் நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறனில் சுமார் 60% ஆகும்.
- இது மாநிலத்தின் மொத்த மின்சார உற்பத்தியில் சுமார் 30% பங்களிக்கிறது.
- தற்போது ராம்சர் தளங்களாக நியமிக்கப்பட்ட 20 ஈரநிலங்களைக் கொண்டுள்ள தமிழ்நாடு, அதன் மொத்த நிலப்பரப்பில் 30 சதவீதப் பகுதியினைப் பாதுகாத்துள்ளது.
- மாநில அரசானது 38 மாவட்டங்களிலும் பருவநிலை நிர்வாகத்தை ஒருங்கிணைத்து வருகிறது.

# தேசியச் செய்திகள்

## NHPC நிறுவனத்தின் பொன்விழா சிறப்பம்சங்கள்




- நவரத்னா நிறுவனமான தேசிய நீர்மின்னாற்றல் கழகம் (NHPC) லிமிடெட் நிறுவனமானது அதன் பொன்விழாவைக் கொண்டாடியது.
- இந்த நிறுவனம் 2025 ஆம் ஆண்டு நவம்பர் 07 ஆம் தேதியன்று அதன் 51வது ஸ்தாபன தினத்தையும் கொண்டாடியது.
- இந்திய அஞ்சல் துறையானது, 12 முக்கிய NHPC அணைகள் இடம் பெறும் தனிப் பயனாக்கப் பட்ட My Stamp என்ற அஞ்சல் தலை ஒன்றையும், நிறுவனத்தின் ஐம்பது ஆண்டு கால நீர்மின் உற்பத்திச் சாதனைகளை ஆவணப்படுத்தும் ஒரு சாதனை புத்தகத்தையும் வெளியிட்டது.
- NHPC நிறுவனத்தின் 50 ஆண்டுகால நீர்மின் உற்பத்தி மேம்பாடு, தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் தேசியப் பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் புது டெல்லியில் ஒரு நினைவு நாணயம் வெளியிடப்பட்டது.
- பொதுமக்களிடையே நீர்மின்னாற்றலின் முக்கியத்துவம் மற்றும் நன்மைகள் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக 'சோட்டா பீம் அவுர் படா பந்த்' என்ற ஒரு கேளிக்கை சித்திரப் புத்தகமும் வெளியிடப்பட்டது.
- இந்த அமைப்பு ஆனது சூரிய சக்தி, காற்று மற்றும் பசுமை ஹைட்ரஜன் ஆகிய

ஆற்றல்களிலும் பன்முகப்படுத்தப் பட்டுள்ளதால், நிலையான வளர்ச்சிக்கு உறுதி அளிக்கும் 100 சதவீதப் பசுமை எரிசக்தி நிறுவனமாக அதன் நிலையை வலுப் படுத்துகிறது.

## தேசிய செயற்கை நுண்ணறிவு ஆளுகை வழிகாட்டுதல்கள்




- மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஆனது இந்தியாAI என்ற திட்டத்தின் கீழ் இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு ஆளுகை வழி காட்டுதல்களை வெளியிட்டது.
- இந்த வழிகாட்டுதல்கள் அனைத்து துறைகளிலும் செயற்கை நுண்ணறிவைப் பாதுகாப்பான, உள்ளடக்கிய மற்றும் பொறுப்புணர்வுடன் ஏற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதன் மூலம் பொறுப்பான புதுமைகளை உறுதி செய்கின்றன.
- இந்த வழிகாட்டுதல்கள் நெறிமுறைக் கொள்கைகள், நிர்வாகப் பரிந்துரைகள், செயல்பாட்டிற்கான காலக்கெடு மற்றும் வெளிப்படையான மற்றும் பொறுப்பு உணர்வுடன் கூடிய AI பயன்படுத்தலுக்கான நடைமுறைத் தேவைகளை குறிப்பிட்டுக் காட்டுகின்றன.
- இந்தக் கட்டமைப்பு ஆனது, 2026 ஆம் ஆண்டிற்கான இந்திய செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டின் தாக்கம் குறித்த உச்சி மாநாட்டிற்கு முன்னதாக அறிமுகப் படுத்தப் பட்டது.

## இந்தியாவின் ஆல்கஹால் சந்தையின் வளர்ச்சி

- 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 20 உலகளாவியச் சந்தைகளில் மொத்த மதுபான நுகர்வில் இந்தியாவில் மிக அதிக வளர்ச்சி பதிவாகியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டின் ஜனவரி-ஜூன் மாதங்களில் இந்தியாவில் மொத்த மதுபான அளவு ஆண்டிற்கு 7% அதிகரித்து 440 மில்லியனைத் தாண்டியது.
- 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இந்தியாவில் மேல் தர மற்றும் அதற்கு மேலான தரத்திலான ஆல்கஹால் வகைகள் அளவு மற்றும் மதிப்பு ஆகிய இரண்டிலும் 8% அதிகரித்தன.
- IWSR (சர்வதேச பழச்சாறு மது/ஒயின்கள் மற்றும் சாராய/மதுபானங்கள் பதிவு) தரவு, 2027 ஆம் ஆண்டிற்குள் உலகளவில் 5வது பெரிய மதுபானச் சந்தையாக இந்தியாவை மாற்றும் பாதையில் வைக்கிறது.

- ❖ மேலும் இந்த காலக் கட்டத்தில் தயார்நிலை பானங்கள் 11% அதிகரித்தன, பீர் 7% அதிகரித்தன, சாராய மதுபானங்கள் 6% உயர்ந்தன என்பதோடு ஒயின்களின் அளவு நிலையாகவே இருந்தது.

**INDIA DRIVES DEMAND** Source: IWSR

| | |
|---|---|
| Total alcohol volume (H1 2025) | >440 million (9 litre cases) |
| Growth rate (YoY) | 7% |
| Indian whisky volume | >130 million (9 litre cases) |
| Fastest-growing spirits subcategory | Irish whiskey +23% |
| Forecast (volume ranking) | India to be 5th largest by 2033 |
| Will surpass | Japan in 2027, Germany in 2033 |
| Markets still ahead in 2033 | China, US, Brazil, Mexico |

## முக்கியமான கனிமங்களின் உரிமத் தொகையில் திருத்தம்

| Mineral | Royalty Rate |
|---|---|
| Caesium | 2% of Average Sale Price (ASP) of Caesium metal chargeable on the Caesium metal contained in the ore produced |
| Graphite<br>› With eighty per cent or more fixed carbon<br>› With less than eighty per cent fixed carbon | <br>› 2% of ASP on ad valorem basis<br>› 4% of ASP on ad valorem basis |
| Rubidium | 2% of ASP of Rubidium metal chargeable on the Rubidium metal contained in the ore produced |
| Zirconium | 1% of ASP of Zirconium metal chargeable on the Zirconium metal contained in the ore produced |

- ❖ சீசியம், கிராஃபைட், ரூபிடியம் மற்றும் சிர்கோனியம் ஆகியவற்றிற்கான திருத்தப் பட்ட உரிமத் தொகை விகிதங்களை மத்திய அமைச்சரவை அங்கீகரித்தது.
- ❖ தாதுவில் உள்ள உலோகத்தின் சராசரி விற்பனை விலையில் (ASP) சீசியம் மற்றும் ரூபிடியம் 2% உரிமத் தொகை விகிதத்தினைக் கொண்டிருக்கும், கார்பன் உள்ளடக்கத்தைப் பொறுத்து சிர்கோனியம் 1% மற்றும் கிராஃபைட் 2–4% உரிமத் தொகை விகிதத்தினைக் கொண்டிருக்கும்.
- ❖ தரங்களில் விலை மாறுபாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் கிராஃபைட் உரிமத் தொகை விகிதம் தற்போது விளம்பர மதிப்பு அடிப்படையில் வசூலிக்கப்படும்.
- ❖ இந்தக் கனிமங்கள் பசுமை ஆற்றல், உயர் தொழில்நுட்ப பயன்பாடுகள், மின்சார

வாகன மின் கலன்கள், அணுசக்தி, விண்வெளி மற்றும் மின்னணுவியல் ஆகியவற்றிற்கு முக்கியமானவையாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா மற்றும் போட்ஸ்வானா – சிவிங்கிப் புலிகள் இடமாற்ற ஒப்பந்தம்





- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவின் அரசு முறை வருகையின் போது, சிவிங்கிப் புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் கீழ் போட்ஸ்வானாவிலிருந்து 8 சிவிங்கிப் புலிகளை இடமாற்றம் செய்ய இந்தியாவும் போட்ஸ்வானாவும் அதிகாரப் பூர்வமாக ஒப்புக் கொண்டன.
- எட்டு சிவிங்கிப் புலிகளில் ஐந்து, அடையாள ஒப்படைப்பின் ஒரு பகுதியாக மொகோலோடி இயற்கை வளங்காப்பகத்தில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட காப்பு மையத்தில் விடுவிக்கப்பட்டன.
- இந்தியா முன்னர் 2022 ஆம் ஆண்டில் நமீபியாவிலிருந்து எட்டு சிவிங்கிப் புலிகளையும், 2023 ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவிலிருந்து பன்னிரண்டு சிவிங்கிப் புலிகளையும் இறக்குமதி செய்தது.
- தற்போது 16 சிவிங்கிப் புலிகள் இந்தியாவில் பிறந்துள்ளதுடன், 27 சிவிங்கிப் புலிகள் இந்தியாவில் உள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்கான புதிய டிஜிட்டல் செயலிகள்

- மத்திய அரசானது, புது டெல்லியில் நடைபெற்ற ஒரு சர்வதேச மாநாட்டில் நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்கு (UCB) சஹாகர் டிஜி பே மற்றும் சஹாகர் டிஜி கடன் ஆகிய செயலிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சஹாகர் டிஜி பே ஆனது கூட்டுறவு வங்கி உறுப்பினர்களுக்கு காகிதமில்லா மற்றும் வேகமான டிஜிட்டல் பண வழங்கீடுகளை மேற்கொள்ள வழிவகை செய்கிறது.

- ❖ சஹாகர் டிஜி கடன் செயலி கடன் பெறுவதற்கான தடையற்ற அணுகலை எளிதாக்கச் செய்கிறது.
- ❖ இந்தச் செயலிகள் சுமார் 9 கோடி வைப்புத்தொகையாளர்கள் மற்றும் கடன் வாங்குபவர்களுக்கான செயல்பாடுகளை நவீனமயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- ❖ இது நிதி உள்ளடக்கத்தினை மேம்படுத்துகிறது மற்றும் இரண்டு ஆண்டுகளுக்குள் 1,500 வங்கிகளில் இந்த வசதியினை கொண்டு சேர்க்கிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## புலிகள் வளங்காப்பக இடமாற்றங்களுக்கான புதிய விதிகள்




- ❖ புலிகள் வளங்காப்பகங்களில் இடமாற்றம் மற்றும் சகவாழ்வு குறித்த புதிய கொள்கை கட்டமைப்பை மத்தியப் பழங்குடியின விவகார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- ❖ 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வெளியிடப்பட்ட கொள்கை குறிப்பு, புலிகள் வளங்காப்பகங்களிலிருந்து வனவாசிச் சமூகங்களை இடமாற்றம் செய்வதற்கான நடைமுறைகளை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- ❖ 2006 ஆம் ஆண்டு வன உரிமைகள் சட்டத்தின் (FRA) கீழ் உரிமைகளை ஒதுக்கீடு செய்த பின்னரே இடமாற்றம் நிகழ வேண்டும் என்று அது கூறுகிறது.
- ❖ எந்தவொரு பகுதியையும் புலிகள் வளங்காப்பகத்தின் ஒரு பகுதியாக அறிவிப்பதற்கு முன்பு கிராம சபை அளவிலும் வீடுகள் அளவிலும் ஒப்புதல் சரிபார்ப்பு தேவையாகும்.
- ❖ இது சமூகத்தை மையமாகக் கொண்ட வளங்காப்பு மற்றும் இட மாற்றத்திற்கான தேசிய கட்டமைப்பையும், வளங்காப்பு-சமூக இடைமுகம் குறித்தத் தேசிய தரவுத் தளத்தையும் (NDCCI) முன்மொழிகிறது.
- ❖ வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் (WPA) 1972 மற்றும் FRA ஆகியவற்றுடன் இணங்கச்

செய்வதை உறுதி செய்ய வருடாந்திர சுயாதீனத் தணிக்கைகளை இது பரிந்துரை செய்கிறது.

### ARISE திட்டம்




- ARISE திட்டம் ஆனது, பிரேசிலின் பெலெமில் நடைபெற்ற COP30 பருவநிலை உச்சி மாநாட்டில் தொடங்கப்பட்டது.
- ARISE என்பது நிலையான பொருளாதாரங்களுக்கான தகவமைப்பு முதலீடுகள் மற்றும் புதுமைகளை துரிதப்படுத்துதல் என்பதைக் குறிக்கிறது.
- இந்தத் திட்டத்திற்கு ஜெர்மனி மற்றும் ஸ்பெயின் ஆகியவற்றிலிருந்து 100 மில்லியன் டாலர் ஆரம்ப நிதி கிடைத்தது.
- ARISE என்பது உலக வங்கியால் நடத்தப்படும் பலதரப்புப் பருவநிலை நிதி நெறிமுறை ஆன பருவநிலை முதலீட்டு நிதிகளின் (CIF) கீழ் உள்ளது.
- வளர்ந்து வரும் நாடுகளில் பொருளாதார மற்றும் நிறுவனத் தகவமைப்பினை வலுப்படுத்துவதையும், தேசியத் திட்டமிடலில் பருவநிலைத் தகவமைப்பினை ஒருங்கிணைப்பதையும் இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.


## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உமிழ்வு இடைவெளி அறிக்கை 2025

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது (UNEP) 2025 ஆம் ஆண்டு உமிழ்வு இடைவெளி அறிக்கையை வெளியிட்டது.
- 2023–24 ஆம் ஆண்டில், 165 மில்லியன் டன் உமிழ்வுடன் உலகளவில் இந்தியாவின் பசுமை இல்ல வாயு உமிழ்வில் மிக அதிக அறுதி அதிகரிப்பு பதிவானது.
- அதிக வருடாந்திர உயர்வு இருந்த போதிலும், இந்தியாவின் தனிநபர் உமிழ்வு முக்கியப் பொருளாதாரங்களில் மிகக் குறைவாகவே இருந்தது.
- தற்போதைய உலகளாவிய கொள்கைகள் நூற்றாண்டின் இறுதிக்குள் தோராயமாக 2.8

டிகிரி செல்சியஸ் வெப்பமயமாதலுக்கு வழிவகுக்கும் என்று அறிக்கை கணித்துள்ளது.

- இருபது (G20) முக்கியப் பொருளாதாரங்களின் குழுவில் ஐரோப்பிய ஒன்றியம் மட்டுமே உமிழ்வினைக் குறைத்து வருவதாக அறிக்கை கூறியது.
- போதுமான தணிப்பு முன்னெடுப்புகள் எதுவும் இல்லாததால் உலக வெப்பநிலைத் தற்காலிகமாக 1.5 டிகிரி செல்சியஸ் அளவைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது என்று இந்த அறிக்கை எச்சரித்தது.




## மாநிலச் செய்திகள்

### 25வது மாநில தினம் - ஜார்க்கண்ட்




- தெற்கு பீகாரில் இருந்து பிரிக்கப்பட்ட ஜார்க்கண்ட் 2000 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம்

தேதியன்று இந்தியாவின் 28வது மாநிலமாக உருவாக்கப்பட்டது.

- அதன் மாநில உருவாக்க தினம் இராஜ்யோத்சவமாகக் கொண்டாடப்படுகிறது.
- இந்த மாநிலத்தில் இரும்புத் தாது, நிலக்கரி, தாமிரம், பாக்சைட், மைக்கா, யுரேனியம் மற்றும் கயனைட் உள்ளிட்ட கனிம வளங்கள் நிறைந்துள்ளது.
- ஜார்க்கண்டின் தலைநகரான ராஞ்சி பெரும்பாலும் "நீர்வீழ்ச்சிகளின் நகரம்" என்று அழைக்கப் படுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பால சாகித்ய புரஸ்கார் 2025



- சாகித்ய அகாடமியின் பால சாகித்ய புரஸ்கார் 2025 விருது வழங்கும் நிகழ்வு 2025 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- இந்த விருது ஆனது 24 இந்திய மொழிகளில் உள்ள குழந்தைகள் இலக்கிய ஆசிரியர்களின் படைப்புத் திறமைகளைக் கொண்டாடுகிறது.
- எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன் "ஒற்றை சிறகு ஓவியா" என்ற குழந்தைகளுக்கான தனது புதினத்திற்காக தமிழ் மொழிப் பிரிவில் 2025 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பெற்றுள்ளார்.

## தாவர மரபணு காப்பாளர் விருதுகள் – PPV மற்றும் FRA



- தாவர மரபணு காப்பாளர் விருதுகள் புது டெல்லியில் வழங்கப்பட்டன.
- இந்த நிகழ்வு ஆனது 2001 ஆம் ஆண்டு தாவர வகைகள் மற்றும் விவசாயிகளின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் வெள்ளி விழாவையும், ஆணையத்தின் 21வது

ஸ்தாபன தினத்தையும் குறிக்கிறது.

- இந்தியா முழுவதும் பாரம்பரிய மற்றும் பூர்வீக விதை வகைகளைப் பாதுகாக்கச் செய்வதற்காக விவசாயிகள் மற்றும் சமூகக் குழுக்களுக்கு விருதுகள் வழங்கி அங்கீகரிக்கப் பட்டன.
- விருது பெற்றவர்களில் தெலுங்கானாவின் சமூக விதை வங்கி, புர்பா பர்தாமனின் (மேற்கு வங்காளம்) சிக்சா நிகேதன், மிதிலாஞ்சல் மக்கானா உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் அசாமின் CRS-நா திஹிங் தெங்கா உனியன் குழு ஆகியவை அடங்கும்.
- PPV&FRA தாவர வளர்ப்பாளர்களுக்கு அறிவுசார் சொத்துரிமைகளை வழங்குகிறது மற்றும் விதைகளைச் சேமிக்க, பயன்படுத்த மற்றும் பரிமாறிக் கொள்வதற்கான விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்கிறது.
- இந்த ஆணையம் தேசியத் தாவர வகைகளின் பதிவேட்டை (NRPV) பராமரிக்கிறது, என்பதோடு மேலும் ஆராய்ச்சி, பல்லுயிர்ப் பெருக்கம் நிறைந்த மற்றும் நிலையான விவசாயத்தை ஊக்குவிக்கிறது.
- விதை வளங்காப்பு மற்றும் விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் பல்லுயிர்ப் பெருக்க முன்னெடுப்புகளை ஆதரிக்க சுமார் 15 லட்சம் ரூபாய் வரையில் நிதி ஊக்கத்தொகை வழங்கப் படுகிறது.

# முக்கிய தினங்கள்

## உலக தர நிர்ணய வாரம் 2025 – நவம்பர் 10/14

- தர மேலாண்மை மற்றும் நிறுவனச் செயல்திறனில் அதன் தாக்கம் குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஊக்குவிப்பதை இந்த ஒரு வார அளவிலான அனுசரிப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பட்டயத் தர நிர்ணய நிறுவனத்தின் (CQI) வழிகாட்டுதலின் கீழ், 2021 ஆம் ஆண்டில் ஒரு தர நிர்ணய தினத்திலிருந்து முழு வார அனுசரிப்பாக மாறிய இந்த அனுசரிப்பு தொடங்கியது.
- உலக தர நிர்ணய தினம் (2025) நவம்பர் 13 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்த வார அனுசரிப்பின் கருத்துரு, "Quality: think differently" என்பதாகும்.





## பொதுச் சேவை ஒளிபரப்பு தினம் 2025 - நவம்பர் 12

- அதன் பொதுச் சேவை முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில் இந்த நாள் ஜன் பிரசாரன் திவாஸ் என்றும் அழைக்கப்படுகிறது.

- இந்த அனுசரிப்பு, 1947 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் தேதியன்று அகில இந்திய வானொலியில் M.K. காந்தியின் முதல் மற்றும் ஒரே நேரடி ஒளிபரப்பை நினைவு கூரும் வகையில் அமைந்துள்ளது.
- புது டெல்லியில் உள்ள ஒலிபரப்பு அலுவகலத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒலிபரப்பு மூலம் குருக்ஷேத்ரா முகாமில் தங்கியிருந்த இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட அகதிகளிடம் காந்தி உரையாற்றினார்.
- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது சுதந்திர கருத்து ஒலிபரப்பில் உஷா மேத்தாவின் பங்கையும் இந்த நாள் நினைவு கூருகிறது.
- உஷா மேத்தா 1942 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் தேதியன்று பம்பாயில் கைது செய்யப் பட்டார் என்பதோடு மேலும் அவர் இயக்கிய நிலத்தடி அல்லது ரகசிய ரேடியோ ஒலி பரப்பியும் அதே நாளில் பறிமுதல் செய்யப்பட்டது.




## உலக நீரிழிவு நோய் தினம் 2025 - நவம்பர் 14




- இது அனைத்து வாழ்க்கை நிலைகளிலும் தடுப்பு, ஒருங்கிணைந்த பராமரிப்பு மற்றும் சுய மேலாண்மையை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர் ஃபிரடெரிக் பாண்டிங்கின் பிறந்த நாளை முன்னிட்டு 1991 ஆம் ஆண்டு சர்வதேச நீரிழிவுக் கூட்டமைப்பு மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றினால் இத்தினம் முதன் முதலில் நிறுவப்பட்டது.
- நீரிழிவு நோய் என்பது உடல் இன்சுலினைச் சரியாக உற்பத்தி செய்யவோ அல்லது

பயன்படுத்தவோ முடியாத ஒரு நிலையாகும் என்பதோடு இது உயர் இரத்த சர்க்கரை அளவு என்ற நிலைக்கு வழி வகுக்கிறது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Diabetes Across Life Stages" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★